Original Suit No. 585/2018 நாள்: 08.03.2023

வா.சா1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை படித்துப் பார்த்து விவரங்களை தெரிந்துகொண்டேன். வழக்குரை பாரா 5ல் நானும் 1 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளும் பிரிவினையாகாத இந்து கூட்டுக்குடும்பமாக இருந்து தாவாச் சொத்தை அனுபவித்து வருவதாகச் சொல்லியிருக்கிறேன். அதாவது 2018 வரை அவ்விதம் அனுபவித்து வந்ததாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. நானும் எனது தந்தை 1ம் பிரதிவாதியும் சர்வே எண் 853/1, ல் 2 ஏக்கர் 65 செண்டும் சர்வே எண் 854/1ல் 2 ஏக்கர் 11 செண்டும் கூட்டாக கிரையம் வாங்கியிருக்கிறோம். மேற்படி சொத்துக்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து கிரையம் பெறப்பட்டன என்றால் சரியல்ல. அவை தனிப்பட்ட வருமானத்தில் இருந்து பெறப்பட்டவை. அவ்விதம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் மேற்படி 2 சொத்துக்களும் பொது குடும்ப சொத்திலிருந்து பெறப்பட்டவை என்றால் சரியல்ல. எனது பெயரில் சர்வே எண்.121/3ல் 2 ஏக்கர் 77 செண்ட்டும் வாங்கப்பட்டது அந்த சொத்தும் கூட்டுக்குடும்ப நிதியிலிருந்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்காக அவ்விதம் பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை மறுத்து பதில் வழக்குரை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல அதே போல நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து 2வது பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. புல எண்.853/1 மற்றும் 854/1 உள்ள சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் அதில் 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் எனக்கும் சரிபாதி பங்குள்ளது அதே போல் புல எண்.121/3ல் 1முதல் 4 பிரதிவாதிகளுக்கு பங்குள்ளது என்றால் சரியல்ல. 2018 வரை நீங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்ததால் மேற்படி சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. ஆகவே மேற்படி சொத்துக்களை சேர்க்காததாலும் உங்கள் தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தாவா 3வது அயிட்ட சொத்திலும் ஏனைய பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணையை தங்களுக்கான குறுக்குவிசாரணையாக ஏற்றுக் கொள்வதாக 5ம் பிரதிவாதி கற்றறிந்த வழக்கறிஞர் இத்திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்ததை இந்நீதிமன்றம் பதிவு செய்துகொண்டது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.
(ஒம்/– R.கோகுல் முருகன்),
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.